# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science


**An online, Peer reviewed, Refereed and Quarterly Journal**

Vol : 2 No : 1 October 2017 ISSN : 2456-5571



**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES** (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

# தன்னிலை (Subject) உருவாக்கத்தில் செயற்படும் அடையாளங்களும் வேறுபாடுகளும்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

**கே.எல்.பாத்திமா நப்லா**
*முதுநிலை ஆய்வாளர்,உயர்கல்விக் கற்கைகள் பீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச் சுருக்கம்**
இவ்வுலகம் வேறுபாடுகளாலும் ஒத்த தன்மையினாலும் ஆக்கப்பட்டது. இத்தகைய இன்றியமைப் பண்பிலிருந்து அடையாளம் உருவாக்கம் இடம்பெறுகின்றது. ‘அடையாளம்’ என்பது குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டமைந்து, அவ்வியல்புகளோடு பொருந்திவரும் கட்டாயத்துடன் இது அமைகின்றது. இதிலிருந்து தன்னிலை (Subject) உருவாக்கம் பெறுவதைப் புரிந்து கொள்ளலாம். அதாவது அடையாள உருவாக்கமானது நிர்ணயமான வகைப்படுத்தலுக்கு உட்பட்ட பாகுபாடாகும். இது மனித இருப்பின் அனைத்து வித அக ரீதியான, புற ரீதியான, சமூக, உளவியல் இயல்புகளையும் தீர்மானிக்கிறது. இத்தகைய நோக்கிலிருந்து அடையாள உருவாக்கம் சுட்டும் தன்னிலை உருவாக்கம், இதன்பேறான அதிகாரக் கருத்தியல்கள் போன்றவற்றின் மீதான ஒரு மெய்யியல் பகுப்பாய்வாக இக்கட்டுரை அமைகின்றது. இது இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணைத்தளக் குறிப்புக்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** அடையாளம், எதிர்நிலை, தன்னிலை, சுயம், மற்றமை

**அறிமுகம்**

இப்பிரபஞ்சத்தில் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒத்த தன்மையினை எதிர்பார்க்க முடியாது. பன்மைக் கருத்தியல்கள் மற்றும் பல்திறன் சிந்தனை வேறுபாடு கொண்டதாகவும் மனித வரலாறு அமைக்கப்பட்டிருக்கிறது. வேறுபட்ட மனிதர்கள், எண்ணங்கள், பொருட்கள் என்பவற்றிற்கிடையிலான இயல்பான மாற்றங்களை இதற்குச் சான்றாக்க முடியும்.

எனினும் இத்தகைய வேறுபாடுகளை இயற்கையாக அமைந்த பன்மைத்தன்மையின் ஆதாரங்களாகக் கொள்ளப்படும் போக்கு மனித வரலாற்று நோக்கில் பொதுமைப்பாடுடையதல்ல. ஏனெனில் வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வான வரிசைப்படுத்தல்களாகவே பார்க்கப்பட்டன. இந்நோக்கிலிருந்தே ஆண்மை – பெண்மை, உயர்ந்தவை – தாழ்ந்தவை, நல்லவை – தீயவை போன்ற இரட்டை எதிர்நிலையாக்கங்கள் கற்பிதங்களாகின. இதனடிப்படையில் மனிதர்களும், பொருட்களும், கருத்துக்களும், எண்ணங்களும் ஏற்றத்தாழ்வான படிநிலையாக்கத்தினால் சுட்டப்படுவதோடு சமூக நடைமுறைகளாகவும் உருவாக்கம் பெற்றன.

இவ்வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வான அடையாள உருவாக்கத்தை ஏற்படுத்தியது. ‘அடையாளம்’ என்பது குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டமைந்து, அவ்வியல்புகளோடு பொருந்திவரும் கட்டாயத்தை முன்வைக்கிறது. இதிலிருந்து தன்னிலை (Subject) உருவாக்கம் பெறுவதைப் புரிந்து கொள்ளலாம். அதாவது அடையாள உருவாக்கமானது நிர்ணயமான வகைப்படுத்தலுக்கு உட்பட்ட பாகுபாடாகும். இது மனித இருப்பின் அனைத்து வித அக ரீதியான, புற ரீதியான, சமூக, உளவியல் இயல்புகளையும் தீர்மானிக்கிறது. இத்தகையதொரு ரீதியிலேயே சமயம், கலாசாரம், இனம், மொழி தாங்கிய அடையாளங்கள் கட்டமைக்கப்படுகின்றன. இது சார்ந்த தன்னிலைகளும் (தமிழர், முஸ்லிம், சிங்களவர்) அதற்கான இயல்புகளோடு பொருந்தி இருக்கும் வகையில் உருவாக்கப்படுகிறது (நப்லா, 2019).

வேறுபாடான சிந்தனைகளையும் இயல்புகளையும் கொண்ட மனிதர்களுக்கு மத்தியில் உருவாக்கப்படும் தன்னிலைகள் ஒரு பொதுமையான, மொத்தத்துவமான (Totality) அடையாளத்தை அமைத்துக் கொள்கிறது. மொத்தத்துவமான பண்புகள் எல்லாக் காலத்திற்குமான பொதுவான உண்மையை உருவாக்குவதோடு அதனை நடைமுறைப்படுத்துகின்றது. உதாரணமாக: ‘பெண்’

என்பது பாலின ரீதியான அடையாளம்,‘ஆசிரியர்’ என்பது தொழில் ரீதியான அடையாளம்,‘தமிழர்’ என்பது மொழி ரீதியில் அமைந்த அடையாளம். இவை அந்தந்த சொற்கள் அல்லது தன்னிலைகளுக்கான இயல்புகளை முன்னிலைப்படுத்துவதன் மூலமும் மற்றமையிலிருந்து (Others) மாறுபாட்டினை வெளிப்படுத்துவதன் மூலமும் ஒரு அடையாளமாக முன்வைக்கப்படுகின்றது.

கலாசாரம்,மதம், அறம், தத்துவம்,வரலாறு, கோட்பாடுகள் மூலமாகவே பெரும்பாலும் மனித சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள் கட்டமைக்கப்படுகின்றன. இவை உருவாக்கும் ஏராளமான எதிர்நிலைகள் குறிப்பிட்டவைகளை நல்லவை, புனிதமானவை, உயர்ந்தவை என்ற சொல்லாடல்களின் மூலம் சுட்டிக்காட்டுவதோடு பிறவற்றை ஒடுக்கப்பட்டஅல்லது விளிம்பு நிலையில் நோக்கும் நிலையினைக் காண முடியும்.

இத்தகைய அடையாள உருவாக்கமானது மற்றமைகளை (Others) விளிம்பு நிலைக்குத் தள்ளும் பணியை தாராளமாக மேற்கொண்டது. இதன்மூலம் முன்னணி வகிக்கும் தன்னிலைகளின் (Subject) அடையாளம் உறுதி செய்யப்பட்டதோடு விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் தன்னிலைகளின் (Subject) அடையாளமும் அதன் மீதான அதிகாரமும் செயற்படத் தலைப்பட்டன. இவை அனைத்துக்கும் பின்புலமாக பகுத்தறிவு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது (மார்க்ஸ், 2001 : 16).

**‘அடையாளம்’என்பதைப் புரிந்து கொள்ளல்**

சமூகவியல் அடிப்படையில் மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடலை முன்னிலைப்படுத்தி அடையாளம் என்பது விளக்கப்படுகின்றது. மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடல் மூலம் தகவல் பரிமாற்றம், காரியங்களை மேற்கொள்ளல், மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துதல் என்பன மட்டுமே நிகழ்வதில்லை. அத்தோடு ஒருவருக்கொருவர் தமது புவியியல், இன, சமூதாய, மற்றும் அரசியல் பின்னணியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் பரிமாறிக் கொள்கின்றனர். இதன்போதான மொழி, மற்றும் நடத்தை மூலம் வெளிப்படும் அடையாளங்களைக் கொண்டு பிறருடன் ஒன்றித்துப் போகவும், வேறுபடுத்திப் பார்க்கவும் விளைகின்றனர். இத்தகைய மொழி மற்றும் உரையாடல் அல்லது கதையாடல் (discourse)‘அடையாளம்’ என்பதன் மையமாகக் காணப்படுகின்றன.

மெய்யியல் ரீதியில் அடையாளம் என்பது ஒன்றின் சுய இயல்பை (It self) விளக்குவதாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது ‘ஒன்று வட்டமாக இருக்கிறது’ என்றால் அது ‘ஒன்றுமில்லாதது’(nothing else)என்பதிலிருந்து மாறுபட்டது. வேறொன்றாக இருப்பதிலிருந்தும் அதன் சுய இயல்பு அதனை வேறுபடுத்திக் காட்டுகின்றது. லைபினிஸ்ட் (Leibniz) இன் அடையாளக் கோட்பாட்டின் பிரகாரம் X என்பது Y இனை ஒத்ததாக இருந்தால்,X இன் உண்மை அனைத்தும் Y உண்மையாகும். எனினும் ‘X இனது உண்மை எது’ என்பது X இனது அடையாளத்துடன் ஒத்துப்போகின்ற போது மட்டுமே இது உய்த்தறி ரீதியில் உண்மையானது. லைபினிஸ்டின் இவ்வாதம் அடையாளம் பற்றிய புரிதலையும், தனித்துவம் பற்றிய புரிதலையும் முக்கியத்துவப்படுத்துகின்றது (Black, 1952).

கிரேக்கத்தின் அரங்கியல் சொற்களான ‘comedy’, ‘tragedy’ போன்றவை ஏனைய மொழியியலாளர்களால் கவிதை, உரைநடை எனப் பொருள்படும் வகையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறே அரிஸ்டோட்டில் முன்வைக்கும் அடையாளம் என்ற கருத்தாக்கமும் ஆரம்பத்தில் மற்றமையைக்(others)குறிப்பதாகவே கருதப்பட்டது. ஒரு பொருள் தன்னுடனோ அல்லது மற்றமையுடனோ (others)தொடர்புபடுவதைக் குறிப்பதாகவே அது பொருள் கொள்ளப்பட்டது. ‘ஒரு பொருளென்பது அதுவேதான் (மற்றமை)’ அல்லது ‘அது அதுவேதான்’.

பிரெஞ்சு மொழியில் மூன்றாம் நபருடன் தொடர்புபட்ட ஒரு கட்டமைப்பாகவே ‘அடையாளம்’ என்பது புரிந்துகொள்ளப்படுகிறது. அவன் / அவள் /x (அறியப்படாதது) என்பதாக கட்டமைத்தல் நிகழ்கின்றது. உதாரணமாக, ஆங்கிலத்தில் அது என்பதை A is Aஎனலாம். இங்கு is என்பது மற்றமையுடன் (others)தொடர்புபட்ட கட்டமைப்புச் செயற்பாடாகும். மற்றமை (other) என்பது அவன் (he), அவள் (she), அது (it) என மூன்றாகப் பிரிகின்றது. இவ்வாறு ஒன்றின் அடையாளத்தை இணைக்கக்

கூடிய அல்லது மற்றமையுடன் ஒன்றின் இருப்பை தொடர்புபடுத்தக் கூடிய பிரிப்பு முறை எங்கிருந்து எம்மை வந்தடைந்தது? அரிஸ்டோட்டிலுக்கு முன்பு கிரேக்கச் சிந்தனையில் இது இருக்கவில்லை. அப்படியென்றால் இது பிராமின்சிடமிருந்து அல்லது பிரபஞ்சவியலை விளக்கிய பிளெட்டோனியர்களிடமிருந்துதான் வந்து சேர்ந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிரேக்க மொழியில் ‘to autos’ என்பது இலத்தீனில் ‘identitas’ என்றும், ஆங்கிலத்தில் ‘Identity’ என்றும் வழங்கப்படும். இது ஒரு பொருள் அல்லது ஒரு தன்னிலை திரும்பத் திரும்ப தன்னை நிறுவிக் கொள்ளலையே குறித்து நிற்கின்றது. இது ஒரு பொருளின் சுயத்தை மாத்திரமன்றி, ஒரு பொருள் பல தடவைகள் தன்னை மீட்டிக் கொள்வதையும் குறிக்கும். ஒத்திருப்பதை மாற்றி பல தடவைகள் மீள நிலைநிறுத்துதல் என்பதே இலத்தீன் மொழிச் சொல்லின் கருத்தாகவும் இருக்கிறது. இதனை வேறு வார்த்தையில் சொல்வதானால், அடையாளம் என்பது மாறாத வெளித்தோற்றத்தை மாத்திரம் குறிப்பதல்ல. அது கால ஓட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றத்தையும் குறித்து நிற்கின்றது.

அடையாளம்,சுயம், நான் என்பதும் ஒன்றல்ல. தனியான அடையாளம்,தூயஉண்மை என எதுவும் கிடையாது. இங்கு பகுதிகளும், உதிரிகளும், வித்தியாசங்களுமே காணப்படுகின்றன. அடையாளம் என்பது அசலிலிருந்து பிரியும் சிதைவுகளின் ஒழுங்கமைவுதான். இது கட்டமைக்கப்பட்டதிலிருந்து மற்றமைக்கு இடையில் தடையாக, திரையாக இருக்கின்றது. தோற்றம், வடிவம் ஆகியன ஒன்றல்ல. தனியான முற்றுமுழுதான அடையாளம் என்றும் எதுவும் கிடையாது. மொத்தத்தில் அடையாளத்திற்கு அடையாளமே கிடையாது. அடையாளம் என்பது **‘நான்’**என்பதல்ல.

**‘நான் யார்?’** (Who am I?)என்ற வினா மெய்யியலுக்கு வெளியே‘தனிநபர் அடையாளம்’ என்பதன் மூலம் சிறப்பான இணைப்பு அல்லது தனியுரிமையைக் குறிக்கின்றது. இந்த அர்த்தத்தில் தனிநபர் அடையாளம் என்பது ‘ஒருவரை ஒரு நபராக’ அல்லது ‘அவர் எதுவாக இருக்கிறாரோ அதுவாக’ உணர வைக்கின்ற பண்புகளைக் கொண்டிருப்பதுடன் அவரை மற்றையவர்களிடமிருந்து வேறுபடுத்தியும் காட்டுகின்றது. இதனடிப்படையில் ஒருவரது தனிப்பட்ட அடையாளம் என்பது தற்செயலானதும் தற்காலிகமானதுமாகும். ஒருவரை மாறுபட்ட ரீதியில் வரையறை செய்ய முடியும் எனினும் அது காலவோட்டத்திற்கு ஏற்ப மாறுபடக்கூடியது. உதாரணமாக, ஒரு இசைக் கலைஞன் ஒரு கவிஞனாக இருக்க முடியும். அவ்வாறே ஒரு கவிஞன் இசைக் கலைஞனாக மாறவும் முடியும் (Hirsch, 1982).

அரிஸ்டோட்டில் ‘அடையாளம்’ என்ற சொல்லாடலுக்கு இத்தகைய கருத்தை வழங்கவில்லை. அவர் தனது ‘மெட்டாபிசிக்ஸ்’ நூலில் தோற்றப்பாடுகளையே விளக்க முயற்சிக்கின்றார். குறிப்பாக, அவர் பொருட்களின் அடையாளத்தை விளக்கியுள்ளார். உதாரணமாக, மரம் என்றால் அது மரம்தான் என்கிறார். இதற்கு எதிர் நிலையில் ‘நான்’ என்பது வைக்கப்படுகின்றது. அவர் ‘நான்’ என்பதற்கு உரித்தானவற்றையும் சார்பியங்களையும் வைத்துள்ளார். அவைமாறக்கூடியவையாக இருந்தாலும் சரி, மாற முடியாதவையாக இருந்தாலும் சரி. ‘நான்’ என்று கூறுவதற்கு சக்தி பெற்றிருக்கும் அளவுக்கு ஏற்ப அவை பங்கு கொண்டு ஒன்றுபடுகின்றன. அவ்வாறே இருத்தலியத் தத்துவத்தில் பேசப்படும் அடையாளத்திற்கும், உளப்பகுப்பாய்வில் பேசப்படும் ‘நான்’ அல்லது ‘சுயம்’ அல்லது ‘ஈகோ’ ஆகியவற்றிற்கிடையிலும் வேறுபாடு உண்டு. அடையாளம் என்பது மற்றமைக்குத் தடையாக இருப்பினும் அது அதுவல்ல. அதன் விளைவாக வருவது என்னவென்றால், அவன் அல்லது நான் என்பதன் அடையாளமே மற்றமைதான். இன்னொரு வகையாகக் கூறுவதானால், அவள் அல்லாத அவன்தான் நான் என்ற நிலைக்கு மாறுகின்றது. ஆனால் நான் அவள் அல்ல. இவ்வாறு அரிஸ்டோட்டிலிலிருந்து அடையாள மெட்டாபிசிக்ஸ் நிர்மாணித்துள்ள இந்த மொழி வலைப்பின்னலுக்கேற்ப ‘நான்’ என்பது மற்றமைக்கு நேரடியான திரையாக இருக்கின்றது. அல்லது அது இதற்கோ அல்லது அந்நியனுக்கோ திரையாக இருக்கின்றது.

பொருட்களின் அடையாளக் கோட்பாட்டை அரிஸ்டோட்டில் வரையறுக்க ஆரம்பித்ததிலிருந்து நான் என்பதை உள்ளடக்கிய மற்றமை பற்றிய பேச்சாகவே அவரது அக்கருத்தாக்கம் புரிந்து

கொள்ளப்பட்டது. இதன் விளைவாக நான் என்பது மற்றமையாக மட்டும் மாறவில்லை. அதையடுத்து வரக்கூடியதாக, அதைப் பிறப்பிக்கக் கூடியதாகவும் மாறியது எனலாம். முன்னால் ஒன்று இல்லாமல் அசல் இல்லை. தர்க்க ரீதியான மொழியில் சொல்வதானால் மொழியின் மீபொருண்மைக்கேற்ப நான் எனும் அடையாளம் அல்லது மற்றமை குறிக்கும் மீபொருண்மை மொழியில் புனையப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. எதிருக்கு எதிர் என்பதாகவே உள்ளது. மொழியியலின்படி கூறுவதானால் இங்கு பண்பு என்பது அசலில் பண்பிக்கப்பட்ட ஒன்றே அன்றி வேறில்லை. அது அதற்கு முந்தியது அல்லது அதற்கு முன்பு நிறுவப்பட்டது. உதாரணமாக 'சோக்ரடீஸ் ஒரு மனிதன்' என்ற வாக்கியத்தில் மனிதன் என்ற பண்பு அடையாளத்தோடு இணைந்து வருவதாகும். அல்லது 'நான் சோக்ரடீஸ்' என்றால் அதற்கு முன்பே அப்பண்பு கட்டமைக்கப்பட்டு விட்டது.

இந்தத் தத்துவ மொழியை ஒருபக்கம் வைத்துவிட்டு மனித மனதின் பரிமாணங்களை சிக்மண்ட் பிறைட் மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவதை நாம் இதனுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கலாம். நனவு மனம், நனவிலி மனம், உபநனவு மனம் என்பதே அவையாகும். பிரக்ஞை பூர்வமான நனவு மனத்தை அவர் 'நான்' என்கிறார். இதற்கு எதிர் நிலையில் உள்ள மற்றமையாகத்தான் அவர் நனவிலியை விளக்கியுள்ளார். அதாவது, பிரக்ஞையற்ற வடிவமான 'நான்' என்பதைப் பல துண்டுகளாகப் பிளவுபடுத்துகின்றார். அது நிலையான முற்றுமுழுதான வெளித்தோற்றம் அல்ல. இங்கே அவர் 'நான்' என்பதையும் 'அது' என்பதையும் வேறுபடுத்திப் பார்க்கிறார். ஆனால், பூரணமாக இரண்டையும் பிரித்துவிட முடியாது. மாறாக'அது'வை 'நான்' இன் அடிப்படையாக மாற்றுகிறார். நான் என்பது 'அது' என்பதை விட்டு முழுமையாகப் பிரிந்தது அல்ல. அதனுடைய அடிப்பகுதி 'அது' என்பதில் கலந்திருக்கிறது. டெரிடாவும் பிறைடும் அடையாளத்தின் உடன்பிறப்பான பிரக்ஞை பூர்வமான 'நான்' ஐ உருவாக்கும் பிரசன்னம், பிரக்ஞை ஆகிய இரண்டும் முழுமையாக விடுபடவில்லை என்கின்றனர். உளப்பகுப்பாய்வு என்பதும் மொழிப் பகுப்பாய்வு என்பதும் ஆழ்மனக் கட்டமைவுகளை கண்டுபிடிப்பதாகவே அமைந்துள்ளன. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரக்ஞைபூர்வமான அறிவு முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறே அரிஸ்டோட்டிலின் 'அடையாளம்' மற்றும் 'நான்' என்பதன் பகுதிகளை விளக்குவதற்கு வசதியாக இந்த இடத்தில் பேர்டினன்ட் சசூர் மற்றமையை ஒரு பதிலீடாக முன்வைப்பதைக் கூறலாம். ஆனால், அதுவே மேலே குறிப்பிட்ட விளைவுகளை பெற்றுத் தருகின்றது.

'அடையாளம்' என்பதோ,'முதன்மை' என்பதோ கிடையாது. இருப்பதெல்லாம் வித்தியாசங்கள், ஒத்தவைகள், பதிலிகள் ஆகியவற்றுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும்தான். சுயம் பற்றிய சிந்தனையை விட்டு விலகிய பிற்பாடு சிந்தனை, எடுத்துரைப்பு, பிரதி ஆகியவற்றை நிர்மாணிக்கும் மொழியானது முரண்பாடுகளிலேயே (வித்தியாசங்களிலேயே) நிலைகொண்டுள்ளது. கண்ணாடி பார்க்கும் விளையாட்டைப் போல ஒன்று மற்றொன்றுக்குத் திரையாக இருக்கின்றது. மற்றமை இல்லாமல் அசலோ, ஆரம்பமோ, அடையாளமோ, நானோ கிடையாது. ஆக, அடையாளம் என்பது அரிஸ்டோட்டிலிய யுகத்தில் இருந்து பிரிகையடைந்த பகுதிகளின் தொகுதியாக இருந்து வருகிறது எனலாம்.

**அடையாளங்களும் வேறுபாடுகளும்**

பொதுமையாக்கப்பட்ட அடையாளங்கள் ஒரு நிச்சயமான பொதுவான இயல்புகளைத் திணிக்கின்ற போது இயற்கையாக அமைந்த இயல்புகள் புறக்கணிக்கப்படுகிறது. புறக்கணிக்கப்பட்ட இயல்புகளோடு பொருந்தி வாழ எந்தவொரு தன்னிலையையும் பகுத்தறிவு அனுமதிப்பதில்லை. அது உருவாக்கி வைத்திருக்கும் கருத்தியல் அதிகாரம் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதில்லை. ஒவ்வொரு தன்னிலைக்கும் அளிக்கப்பட்டிருக்கும் நிலையான அடையாளம் பகுத்தறிவின் விதிகளை போற்றிப் பாதுகாக்கும் பணியை செம்மையாகச் செய்து கொண்டிருக்கிறது. அவ்வடையாளத்தை விட்டும் வெளிவர முடியாதளவில் அதிகாரக் கண்காணிப்புக்குள் ஆக்கப்பட்டிருக்கிறது.

வேறுபாடுகளையும் பன்மைத் தன்மையையும் ஆதரிக்கும் பின்நவீனமானது இவ்வாறு விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் தன்னிலை அடையாளங்கள் மீது கவனம் செலுத்துகிறது. எல்லாவற்றையும் ஒருமைப்படுத்தும் பொதுவான இயல்பு அல்லது பொதுவான உண்மை என்று எவையும் இருக்க முடியாது எனக்கருதிய

இச்சிந்தனை, அறிவுக்கு மாற்றமாக மனித உணர்வுகளுக்கும், இயற்கையாகவே அமைந்த இயல்புகளுக்கும் முன்னுரிமை அளித்தது. இதன்மூலம் அடையாள உருவாக்கம் மேற்கொள்ளும் அதிகாரத்திற்கு எதிரான உரையாடலை பின்நவீனச் சிந்மனைகளே ஆரம்பித்தது.

அடையாள உருவாக்கம் எனும் போது பொதுவான அடிப்படையில் அமையும் ஏற்றத்தாழ்வான இருமை எதிர்வுகள் இரு வேறு இயல்புகளைக் கொண்ட தன்னிலைகளாக (Subject) உருவாக்கப்படுகின்றன. இதில் முன்னையதின் இயல்புகள் அடையாளப்படுத்தப்படும் போதே பின்னையதின் இயல்புகளும் அடையாளப் படுத்தப்படுகின்றது. இங்கு மேன்மையான அல்லது உயர்ந்த அடையாளங்களைக் கொண்டதாக கருதப்படும் தன்னிலை ஆதிக்க மனப்பான்மையைப் பெற்று விடுகிறது. இதன்படி கீழானது என விதிக்கப்பட்ட தன்னிலையானது விளிம்பு நிலை அடையாளத்தைப் பெற்றுக்கொள்கிறது. மேன்மையானது என்பதுகூட கற்பிதங்களால் தீர்மானிக்கப்படுவதாகும் (நப்லா, 2019).

இவ்வாறு இயல்புகளை வழங்கி அடையாளத்தைத் திணிப்பது ஒரு வகையான வன்முறை என்றால் அவ்வடையாளங்களின் அடிப்படையில் விளிம்பு நிலைக்குத் தள்ளுவதும் இன்னொரு வகையான வன்முறையாகும். இவ்வாறான அடையாள உருவாக்கம் சமூகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது. இதுகலாசார உருவாக்கம் எனலாம். இவ்வடையாளங்களைக் கட்டிக்காக்கும் கலாசாரம் கூட சமூகக் கருத்தியல்களினால் உருவாக்கப்பட்டவை என்கிற கருத்தும் இதனைச் சார்ந்ததே.

அதாவது, அனேக தன்னிலைகளின் அடையாளம் மற்றும் இயல்புகளைக் குறிப்பிட்டு வகைப்படுத்தியிருப்பதில் கலாசாரத்தின் செல்வாக்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இது சமூக படிநிலையாக்கத்தினை உருவாக்கியதன் மூலம் ஏராளமான இருமை எதிர் நிலைகளை உருவாக்கியது. எனவே கீழ் நிலைப்பட்ட (தாழ்த்தப்பட்ட) தன்னிலைகளுக்கான அடையாளங்களை மிக நுணுக்கமாகச் செதுக்கி அதிலிருந்து அவர்களை விடுபடாமல் காத்துக் கொண்டிருப்பதில் மேல் நிலைப்பட்ட தன்னிலைகள் மிகக் கவனமாக செயற்பட்டன. இவை கட்டுமைப்புக்களாக்கப்பட்டு நிலையானது என்று ஏற்றுக்கொள்ளச் செய்யப்பட்டன. இவ்வகையான கட்டமைப்புக்களைக் கட்டுடைத்தல் என்ற வேலையை அனேகமான பின்நவீனச் சிந்தனையாளர்கள் கையிலெடுத்தனர். இதன் விளைவாக தத்துவம், சமயம், பண்பாடு, அறவியல், விஞ்ஞானம் என எல்லாவற்றையும் பகுத்தறிவினால் உருவாக்கப்பட்டது என்ற கருத்துக்களை முன்வைப்பதோடு அவற்றை விமர்சிக்கவும் செய்கின்றனர். இவ்வாறு கலாசார, விஞ்ஞான, சமயப் போர்வையில் பகுத்தறிவு தனக்கான நியாயித்தலை பெற்றுக் கொள்கிறது என்பது இவர்களது வாதமாகும்.

இயல்பான வேறுபாடுகளினின்றும் மனித உணர்வுகளும், ஆசைகளும், விருப்பங்களும் புறக்கணிக்கப்பட்டு பொதுவான அடையாளம் வழங்கப்பட்ட இயல்புகளும், முறைமைகளும் கொண்ட தன்னிலைகளாக மனிதன் உருவாக்கப்படுகிறான்.

வேறுபட்டவைகளில் ஒத்தத்தன்மைகளை மட்டும் முக்கியத்துவப்படுத்துவதே அடையாள உருவாக்கம் என எர்னஸ்டோ லக்லவ் மற்றும் சந்தால் மோபே போன்றோர் கருதுகின்றனர். அதாவது ஒரு குழு என்ற ரீதியில் தேவைகள் ஒருநிலைப் படுத்தப்படுகின்ற போது அல்லது பொதுவான நோக்கில் பார்க்கப்படுகின்ற போது அவை பொதுவான அடையாளத்தின் கீழ் இணைகின்றன. அது போலவே ஒவ்வொரு தன்னிலையும் தத்தமக்கென்று பொதுவான இயல்புகளை உடையதாக கட்டமைக்கப்படுகின்றது.

அதாவது 'ஆண்' என்கின்ற தன்னிலையை (Subject) எடுத்துக்கொள்கின்ற போது 'ஆண் என்பவன் வீரமானவனாகவும் கம்பீரமானவனாகவும் இருக்க வேண்டும், மென்மை அவனுக்குரிய பண்பல்ல, அவன் அழுபவனல்ல, அவன் அடிபணிபவனல்ல' போன்ற இயல்புகள் அல்லது அடையாளங்களாகக் குறிப்பிடப்படுகின்றது. இவை ஆண் எனும் Subject இன் அடையாளங்களாகும். எனவே இவற்றிலிருந்து மாற்றமுற்ற இயல்புகளைக்கொண்ட ஒருவர் ஆணாக இருக்க முடியாது என்பன போன்ற கற்பிதங்கள் இதிலிருந்து வெளிக்காட்டப்படுகின்றது. குறிப்பிடப்பட்ட இயல்புகளுக்கு மாற்றமாக ஒரு ஆண் இருப்பான் எனில் அவன் சமூகத்தால் அவனது இயல்பு பழிக்கப்படுகிறது.

எனவே இதிலிருந்து அவனுக்கேயுரித்தான இயற்கையான இயல்புகள் மறுக்கப்படுகிறது. ஆண்

எனும் Subject இற்கான இயல்புகளையே அவன் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் உருவாக்கப்படுகிறது. இது திரும்பத்திரும்ப சமூகத்தால் ஒப்புவிக்கப்படுவதோடு அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுகிறது. பின் நவீனச் சிந்தனையாளரான தெலுஸ் கூறுவது போல் 'திரும்பச் சொல்லுதல்' எனும் முறைமையின் மூலம் இத்தகைய அடையாள உருவாக்கங்கள் நிகழ்கிறது எனும் கருத்தில் நின்றும் இதனை நோக்க முடியும்.

'எனவே வேறுபாடு எனும் போது இங்கு இரண்டு விடயங்கள் பற்றிப் பேசுகிறோம்.

1. இயற்கையாக அமையும் வேறுபாடுகளும், வேறுபட்ட மனித இயல்புகளும் கண்டுகொள்ளப்படாமல் ஒரு பொதுமையாக்கத்துக்குள் உள்வாங்கப்படுதல். இதன் மூலம் சுமத்தப்படும் பொதுவான அடையாளம் ஏற்படுத்தும் வன்முறை.

2. பொதுவான இயல்புகளைக் கொண்ட அல்லது அடையாளங்களைக் கொண்ட பல தன்னிலைகள் (Subjects) கட்டமைக்கப்பட்டு ஏற்றத்தாழ்வான படிநிலை வரிசைப்படுத்தலை உருவாக்கல். இதன் மூலமான வேறுபாடுகள் ஒன்றையொன்று அடக்கி ஆளுகின்ற, ஒன்றையொன்று தீர்மானிக்கின்ற அதிகாரம் கொண்டதாக அமையப்பெறல். இதன் மூலம் உருவாகும் வன்முறை' (நப்லா, 2019).

என்றவாறாக இவ்வன்முறை வெளிப்பாடுகளைக் கண்டுகொள்ள முடியும்.

**பகுத்தறிவின் அதிகாரமும் தன்னிலை (Subject) உருவாக்கமும்.**

பகுத்தறிவின் அதிகாரம் எனும் போது அதனை அரசியல் அதிகாரம் போலவோ பாசிசம் போலவோ புரிந்து கொள்ளப்படுகின்ற அறிவுமட்டச் சிந்தனைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி 'விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்குள் இவ்வுலகம் ஆட்பட்டுள்ளது' போன்ற கூற்றுக்கள் மூலம் பகுத்தறிவின் அதிகாரம் என்பதை விளக்கம் கொண்டு விஞ்ஞான அறிவே பகுத்தறிவு என்ற ரீதியிலும் அர்த்தம் பெற்றுக்கொள்ளப் படுகின்றது. ஆனால் இது அதுவன்று. இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பதே பகுத்தறிவாகும். அதாவது எல்லாவற்றையும் தீர்மானிப்பதே பகுத்தறிவு என்ற ரீதியில் இது நோக்கப்படுகின்றது. இங்கு பகுத்தறிவு அதிகாரமாக எப்படி செயற்படுகிறது என்று கேட்டால் இவை அனைத்தையும் உருவாக்கி நிலைபெறச் செய்வதுடன் உருவாக்கப்பட்ட வரையறை ஒழுங்கமைப்பு மாறாமல் பார்த்துக் கொள்ளவும் செய்கிறது. இது பற்றிய பூக்கோவின் கருத்துக்கள் இங்கு முக்கியமாக நோக்கத்தக்கவை.

அதாவது அறிவும் அதிகாரமும் அடிப்படையிலேயே உறவு கொண்டவை. இது வெளித்தெரியாத வகையில் ஒழுங்கமைப்புக்களை உருவாக்கி அதில் உள்ளடங்கியுள்ளது. மனிதர்களை கோட்பாட்டு ரீதியில் சட்டகப்படுத்தி வைத்திருப்பதன் மூலம் எதிர்நிலையாக வரையறுக்கப்பட்ட தன்னிலைகள் (Subjects) உருவாக்கப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவப் பயிற்சி பெற்ற பகுத்தறிவு கொண்ட மக்கள் பகுத்தறிவு அற்றவர்களுக்கு எதிராக தம்மை வரையறுத்துக்கொண்டு தீர்ப்பு வழங்கி அவர்களை பைத்தியம் அல்லது நோயாளிகள் என ஒதுக்கி வைத்திருப்பதைக் காணலாம். இது போன்று பால்மேலாதிக்கவாதிகள், இனவெறியர்கள், ஏகாதிபத்தியவாதிகள் என அனைவரும் இதனையே கையாள்கின்றனர். நிலையான அல்லது வரையறுக்கப்பட்ட தன்னிலைகளை உருவாக்கி விடுகின்றனர். இதன்போது 'விலக்கப்படுபவர்கள்' என ஒரு குறிப்பிட்ட தன்னிலைகள் உருவாகி விடுகின்றனர் என்கிறார் பூக்கோ (பிரேம், 2008).

சொல்லாடல் அல்லது உரையாடல் என்பதனூடாக ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னிலை உருவாக்கம் நிகழ்கிறது. இவ்வுரையாடல்களில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் அவர்களிலிருந்தும் சிலரை விலக்கி கீழ் நிலைப்படுத்துகின்றனர். இதன்போது விலக்கப்படுபவர்களாக ஒருபால் விருப்புடையவர்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர்கள், மனப்பிறழ்வுடையவர்கள், கைதிகள் என பல்வகைக்குட்பட்ட பிரிவினர்கள் உள்ளடங்குகின்றனர். இப்பாகுபாட்டின் பின்னணியில் வைக்கப்படும் நியாயங்கள் பகுத்தறிவு வகுத்து வைத்திருப்பவையாகும். இத்தன்னிலைகளின் குறிப்பிட்ட பெயர் சூட்டலுக்கு மொழி ரீதியான கட்டமைப்பு அடிப்படையாகிறது. மொழியினைக் கொண்டே அமைக்கப்பட்ட தன்னிலைக்கான இயல்புகளும் தீர்மானிக்கப்படுகின்றன.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ரீதியில் அமைந்த தன்னிலைகள் தொலைக்காட்சி, விளம்பரங்கள், பாடல்கள், செய்திகள், திரைப்படங்கள் போன்ற அனைத்திலும் இருமை எதிர்நிலையில் ஏற்றத்தாழ்வுகளுடன் வெளிப்படுத்தப்படுகின்றன. இது சமூகத்தின் மேல்மட்டம், கீழ்மட்டம் என எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. உரையாடல்கள் என்பவை, இவற்றை இயற்கையாக அமைந்தது போலவும், கடவுளின் கட்டளை என்பது போலவும் சித்தரித்துக் கொண்டிருக்கின்றன என்கிறார் பூக்கோ. இவற்றை நாம் புனிதப்படுத்தல்கள் எனலாம். அதாவது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற நியதிகள், அவை சமூகத்தினால் உருவாக்கப்பட்ட உரையாடல்களாக எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறே, நாம் என்னவாக ஆக்கப்படுகிறோம் என்பதை அறியாமலே அத்தன்னிலைகளுக்குள் நாம் ஆட்பட்டு விடுகிறோம்.

அதாவது, ஒரு திரைப்படமோ அல்லது விளம்பரமோ ஆண் / பெண் என்ற தன்னிலையினை எவ்வாறு உருவகித்துக் காட்டுகின்றதோ அவ்வாறே பொருந்தி வாழவும், அதுவே யதார்த்தம் என்றவாறான கற்பிதங்களையும் உருவாக்குகின்றன. ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பொதுவான கண்ணோட்டமாகவே அனேகமாக அவை தோற்றமளிக்கிறது அல்லது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

‘எடுத்துக்காட்டாக, ஐடக்ஸ் (Iodex) விளம்பரத்தை எடுத்துக் கொள்வோம், அதில் வருகின்ற பெண் நடிகை காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை வீட்டு வேலைகள், கணவனுக்குரிய வேலைகள், பிள்ளைகளுக்குரிய வேலைகள், (அலுவலகம் செல்பவளாக காட்டப்பட்டால்) அலுவலக வேலைகள் என அனைத்தையும் மேற்கொள்வாள். இறுதியில் இடுப்புவலி ஏற்பட்டு விடும். உடனே ஐடக்ஸ் மூலம் நிவாரணம் பெற்றுக்கொண்டு அவள் குணமடைவதாக விளம்பரம் அமைந்திருக்கும். வெளிப்படையாக அது இடுப்புவலிக்கான நிவாரணத்தை விற்பதற்கான ஒரு விளம்பரம்.

ஆனால் அங்கு உள்ளார்ந்த ரீதியில் ‘பெண்’ என்ற தன்னிலை பற்றிய கற்பிதங்கள் உருவகிக்கப்படுகின்றன.

- பெண் என்பவள் வீட்டு வேலை செய்பவள்,
- ஒரு நாளின் அத்தனை வேலைகளும் அவளது பொறுப்பில் இருப்பவை,
- பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வது என்பது முழுவதுமான பெண்களின் பணி,
- அது மட்டுமன்றி அவளுக்கு இதன் மூலம் இடுப்புவலியே வந்தாலும் நிவாரணி எடுத்துக்கொண்டு மீண்டும் அதை அவளேதான் செய்தாக வேண்டும்.

போன்ற கற்பிதங்கள் தன்னிலைக் கட்டமைப்பிற்கான சமூகத்தின் பிரதிபலிப்பாக வெளிப்படுகிறது. இவ்வாறு ஆண் - பெண், ஆண் குழந்தை – பெண் குழந்தை, படித்தவன் - பாமரன் என இருமை எதிர்நிலைத் தன்னிலைக் கற்பிதங்களின் பிரதிபலிப்பினை உருவாக்கி நிகழ்த்திக் காட்டுவதில் விளம்பரம், திரைப்படங்கள் போன்ற காட்சி ஊடகங்களின் பங்கு மிகையானது’ (நப்லா, 2019).

அது மட்டுமன்றி, விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்கள் மூலமாக ஏற்றத்தாழ்வான தன்னிலை வரிசைப்படுத்தல்களும் வடிவமைக்கப்படுகின்றன. இத்தகைய தன்னிலை ஆக்கம் இலகுவாக மக்களைச் சென்றடைகின்றது. இவ்வாறு மிக நுண்ணிய ரீதியில் பகுத்தறிவின் ஆதிக்கம் அமைகின்றது.

பகுத்தறிவின் அதிகாரம் உருவாக்கும் தன்னிலை அடையாளம் பற்றிய நோக்கில், தனிமனிதத் தன்னுரிமை மீதான விமர்சனமாக பின்நவீன வாதிகள் பகுத்தறிவின் அதிகாரத்தை முன்வைத்தனர். தனிமனிதர்களைக் குறிக்க பின் நவீனச் சிந்தனையாளர்கள் ‘தான்’(Self) என்பதை விடத் தன்னிலை (Subject) என்ற சொல்லையே தேர்ந்தெடுத்தார்கள் (பிரேம், 2008).

அதாவது தனித்தனியான மனிதர்கள் ஒவ்வொருவரும் தான் வாழுகின்ற சமூகத்தின் முன்னிலை பெற்ற அல்லது பிரதானமாக்கப்பட்ட கருத்தாக்க வெளிப்பாட்டின் அதிகாரச் சொல்லாடல் மூலம் கட்டுப்படுத்தப் பட்டவர்களாகவோ, கட்டமைப்புக்குள்ளானவர்களாகவோ இருப்பர். சொல்லாடல்கள் என்பவை அடையாள வலியுறுத்தலைச் செய்வதாகும். இச்சொல்லாடல்களே தன்னிலையை உருவாக்குகின்றன. இது விளையாட்டு வீரர், அலுவலக ஊழியர், குப்பை சேகரிப்பவர் என்றவாறாக தன்னிலை உருவாக்கங்கள் பலவாறாக அமையும். இவை குறிப்பிட்ட

இயல்புகளால் சுட்டப்பட்ட அடையாள அமைப்புக்களாகும்.

இவ்வாறு அதிகாரத்தின் சொல்லாடல்களால் பாதிக்கப்படும் போது எமது அடிப்படை அடையாளம் மற்றும் நம்மைப்பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து ஆகியவை சிக்கலுக்குள்ளாகின்றன. இச்சொல்லாடல்கள் எமக்கான ஒரு இடத்தை உருவாக்கி எம்மை அதில் பொறுத்தி விடுகின்றன. இது எவ்வாறு கட்டமைக்கப்பட்டு நம்ப வைக்கப்படுகின்றது என்பது தொடர்பான ஆய்வு பின்நவீனத்துக்குரியதாகும். இலக்கியங்கள், திரைப்படங்கள், விளம்பரங்கள் வாயிலாக இது எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்பது தொடர்பில் பின்நவீனச் சிந்தனையாளர்கள் கருத்தளித்தனர். அதன்போது நிகழ்த்தப்படும் மைய – விளிம்புப் பகுப்பினையும் எடுத்துக்காட்டினர். அவ்வகையில் தெரிதா, பூக்கோ, ரோலண் பார்த் போன்றோரின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

மேலும் கட்டமைக்கப்படும் தன்னிலை (Subject) என்பது எப்போதும் நிலையான அர்த்தம் கொண்டதல்ல. அதாவது மனித இருப்பு தன்னுரிமை கொண்டதல்ல, அது தொடர்ந்த கட்டுமானத்தில் உள்ள தொடர்ந்து முரண்படக்கூடிய, எப்போதும் மாற்றமுறக்கூடிய ஒரு செயல்நிலை என்ற கேதரின் பெல்ஸியின் கருத்தின் படி தன்னிலையும் தொடர்ந்த மாற்றத்துக்குள்ளாகக் கூடியது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

மனித அடையாளமானது ஒரு புனைவைப் போல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பது பின் நவீனக் கருத்து. இதன்படி எல்லாக் காலத்திற்கும் ஒரு தன்னிலை (Subject) ஒரே அர்த்தம் தரக்கூடியதாக, ஒரே அடையாளத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. அது தனக்கான சொல்லாடல்களை மாற்றிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு காலகட்டத்திலும் அதிகாரம் செலுத்தும் உரையாடல்களின் வழி நின்று தனக்கான எல்லைகளையும், வரையறைகளையும் தளர்த்திக் கொள்கிறது. இதன்படி பூக்கோ சொல்வது போல எல்லாக் காலத்திலும் ஏதோவொரு அதிகாரம் மிக்க கருத்தாக்கம் அதனைக் கட்டமைத்துக்கொண்டோ, கட்டுக்குள் வைத்துக்கொண்டோ செயற்படுகிறது. எவ்வாறாயினும் அதன் பின்னணியில் பகுத்தறிவின் அதிகாரம் உருவாக்கும் அடையாள உருவாக்கம் தாக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் என்பது திட்டவட்டமானது.இத்தகைய ரீதியில் அடையாள உருவாக்கம் மற்றும் தன்னிலையாக்கத்தில் பகுத்தறிவு எவ்வாறு அதிகாரமாகச் செயற்படுகிறது என்பதனை நோக்க முடியும்.

## Reference


1. நப்லா, கே. எல், எப்., (2019), அடையாளங்களும் வேறுபாடுகளும், தமிழ் நாடு: இராஜா வெளியீட்டகம்.
2. பிரேம், (2008),பின் நவீனத்துவம் மிகச்சுருக்கமான அறிமுகம், சென்னை: அடையாளம் பதிப்பகம்.
3. *மார்க்ஸ், அ., (1996),பின் நவீனத்துவம் : இலக்கியம், அரசியல், கோவை: விடியல் பதிப்பகம்.*
4. மார்க்ஸ், அ., (2001), கலாசாரத்தின் வன்முறை, சென்னை: அடையாளம் பதிப்பகம்.
5. Baker, L. R., 2000, *Persons and Bodies: A Constitution View*, Cambridge: Cambridge University Press.
6. Behan, D., 1979, 'Locke on Persons and Personal Identity', *Canadian Journal of Philosophy*, 9: 53–75.
7. Black, M., 1952. "The Identity of Indiscernibles.", *Mind*, 61(242): 153–164.
8. DeGrazia, D., 2005, *Human Identity and Bioethics*, New York: Cambridge University Press.
9. Deutsch, H., 1997. "Identity and General Similarity", *Philosophical Perspectives*, 12: 177–200.
10. Garrett, B., 1998, *Personal Identity and Self-Consciousness*, London: Routledge.
11. Glover, J., 1988, *I: The Philosophy and Psychology of Personal Identity*, London: Penguin.
12. Hirsch, E., 1982, *The Concept of Identity*, Oxford, Oxford University Press.